# A-லைன் ராக்லான் டிரஸ்


## இந்த டுடோரியலில் A லைன் ராக்லான் டிரஸ் எப்படி தைக்கலாமுனு கற்றுக்கொள்வோ


















## தேவையான பொருள்கள்

60 ”அகலமான 3.5 மீட்டர் ஸ்டெச் துணி
www.ushasew.comலிருந்து டவுன்லோட் செய்யப்பட்ட A-லைன் ராக்லான் டிரஸ்-க்கான டெம்ப்ளேட்ட இதில வைக்கணும்
சாக்
கத்தரிக்கோல்
பின்கள்
நூல்
அப்றம் ரெடி பயாஸ் ஸ்ட்ரிப்

நாம டெம்ப்ளேட்டிலிருந்து முன், பின் பக்கங்கள், ஸ்லீவ் துண்டுகள எப்படி கட் பண்றது, அப்புறம் ஸ்லீவ முன், பின் பக்கங்கள்ல தைக்கறது, பக்கவாட்டு சீமை தைக்கறது அப்புறம் ஸ்லீவ்களையும் அடிப்பாகத்தையும் ஹெம் பண்றது, கடைசியா நெக்லைனை ஃபினிஷ் பண்றது எப்படின்னு கத்துக்கப்போறோம்

## ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்க்கிங் செய்தல், வெட்டுதல்


துணியின் மடிப்புகளை பிரிக்கிறதிலிருந்து தொடங்கலாம். வீடியோல காட்டியிருக்கற மாதிரி முழுசா விரிச்சிருங்க. துணிய திருப்பிப் போடுங்க. அப்புறம் துணியோட 1/3அ மடிச்சு அதுக்கு மேல முன்பக்கம் மார்க் பண்ணப்பட்ட டெம்ப்ளேட்ட வையுங்க. மடிஞ்சிருக்கற பக்கம் துணியின் மடிப்புல வைக்கப்படணுங்கறதை மறக்காதீங்க.

அடுத்து, நாம துணி மேல டெம்ப்ளேட்ட வெச்சு மணிகோர்த்த பின்களால அதை அசையாம பின்பண்ணனும். மார்க் பண்ண சுலபமா இருக்க துணியின் ரெண்டு அடுக்கிலயும் பின் நுழையுதாங்கிறதை உறுதி செய்துக்கணும், பின் பண்ணி முடிச்சதும், விடியோல காட்டிருக்க மாதிரி துணில டெம்ப்ளேட்ட மார்க் பண்ணுங்க. அதை கவனமா ட்ரேஸ் பண்ணனும் ஏன்னா உங்க டிரஸ் பேட்டன் சூப்பரா இருக்குமா இல்லை சுமாரா இருக்குமாங்கறதை இதுதான் முடியு பண்ணும். இதை செய்து முடிச்ச பிறகு, டெம்ப்ளேட்டிலிருந்து பின்ன எடுத்துட்டு கத்திரிக்கோலை கைல எடுங்க. கைய ஆட்டாம ஸ்டடியா மார்க்கிங்ல கட் பண்ணிட்டே போங்க, இப்ப முன்பக்கத் துண்டு ரெடியாகிருச்சு. அப்டியே மடிச்சு அப்புறமா தைக்கறதுக்கு ஒரு பக்கமா வையுங்க.

பின்பக்க துண்டுக்கு, மீதி உள்ள துணிய கட் பண்ணாத பக்கத்திலிருந்து வீடியோல காட்டி இருக்க மாதிரி ரெண்டா மடியுங்க அப்புறம் துணிமேல பின்பக்க டெம்ப்ளேட்ட வையுங்க. மடிப்பை சுட்டிக்காட்டற பக்கத்தை மடிப்புக்கு மேல வைக்கணுங்கிறதை மறந்துராதீங்க. பின்பண்ணத் தொடங்கலாம். ஒட்டுமொத்த டெம்ப்ளேட்டயும் துணில வைச்சு பின்பண்ணி, அந்த டெம்ப்ளேட்ட ஒரு சாக்கால ட்ரேஸ் பண்ணுங்க. இது முடிஞ்சதும், கத்திரிகோலை எடுத்துகிட்டு மார்க்கிங்ல கட் பண்ணிட்டே வாங்க, இப்ப உங்களோட முன், பின் பக்கங்கள் தயார்.








அடுத்து நாம ஸ்லீவ் தயாரிக்கலாம், துணில மீதி உள்ள துண்டை எடுத்து இதுல காட்டியிருக்கற மாதிரி மடியுங்க. ஒரு recap பாக்கலாம், இதுதான் தவறான பக்கம், இதுதான் சரியான பக்கம். இப்ப டெம்ப்ளேட்ல மார்க் பண்ணின ஸ்லீவ எடுத்துட்டு அதை துணி மேல வையுங்க. முன், பின் பக்கங்கள்ல செய்ததுபோலவே ஸ்லீவ் டெம்ப்ளேட்ட துணில வெச்சு பின் பண்ணுங்க, அப்புறம் அதை சாக்-அ வெச்சு ட்ரேஸ் பண்ணுங்க. இது முடிஞ்சதும், டெம்ப்ளேட்டிலிருந்து பின்ன எடுத்து மார்க் பண்ணின பகுதிய கத்திரிகோலை வைச்சு கட் பண்ணுங்க.

இப்ப நமக்கு ஸ்லீவ் துண்டுங்க கிடைச்சிருச்சு. இப்ப நாம ஸ்லீவோட அளவுகளைப் பாக்கலாம்

## ஸ்டெப் 2 முன், பின் பக்கங்கள்ல ஸ்லீவ இணைத்தல்















தைக்க தயாராக இப்ப நாம எல்லா துண்டுகளையும் பின் பண்ணுவோம். வீடியோல காட்டியிருக்கற மாதிரி ஸ்லீவ்கள எடுத்து அவற்றை முன்பக்க துண்டுக்கு மேல வைக்கணும். இதையெல்லாம் பின்னாடி பக்கம் செய்யறோங்கறதை கவனிங்க. வீடியோல காட்டியிருக்கற அதே மாதிரி ஸ்லீவையும் முன்பக்க பீசையும் ஒன்னா சேர்த்து பின்பண்ணுங்க. சரியான பக்கம் சரியான பக்கத்தைப் பாத்துட்டு இருக்கணும். இன்னொரு பக்கத்திலயும் அதே மாதிரி செய்யுங்க.


இப்ப நாம பின்பக்க துணிய எடுத்து அதையும் இணைக்கணும். பின் பக்கம் முன்னால இருக்கற மாதிரி விரிச்சு வீடியோல காட்டியிருக்கற மாதிரி அதை ஸ்லீவ்ல இணையுங்க. இது ஒரு ரொம்ப முக்கியமான கட்டம், எல்லா துண்டுகளையும் சரியா பின்பண்ணியிருக்கிறதை நீங்க உறுதி செய்துக்கணும்.

இது முடிஞ்சதும், தைக்க தொடங்கிரலாம். உஷா ட்ரீம் மேக்கர் 120 மிஷினுக்கு துணிய எடுத்துட்டுப்போய் மிஷின் நேர்தையல் மோட்-ல இருக்கறதை உறுதி செய்துக்கங்க. தைச்சிட்டே போகறப்ப பின்களை அகற்றிட்டே போகணும். நமக்கு தைக்க பின்செய்யப்பட்ட நாலு பக்கங்கள் இருக்கு.

ஸ்லீவ ராக்லான் டிரஸ்-ன் முன் & பின் பக்கங்கள்ல இணையுங்க. வலது பக்க ஸ்லீவ பின், முன் பக்க துண்டுகள்ல இணைக்கணும், அடுத்த பக்கத்திலயும் இதையே திரும்பச் செய்யணும். இந்த ஸ்டெப் கொஞ்சம் திரும்பத் திரும்ப வர்ற மாதிரி இருக்கலாம், ஆனா தொடர்ந்து பாருங்க, இதன் ஃபைனல் பிராடக்ட் அற்புதமா இருக்கும். முடிஞ்சிருச்சு. உங்க இறுதி தையல் பாக்க இந்த மாதிரி இருக்கணும். இவை பார்க்க எவ்வளவு நேர்த்தியா இருக்கு?






## ஸ்டெப் 3 நெக்லைன் முடித்தல்

இப்ப நெக்லைன்ல கவனம் செலுத்தலாம். நெக்லைனை முடிக்க, பொருத்தமான பயாஸ் ஸ்ட்ரிப எடுத்துக்கொங்க, நெக்லைன்ல வைச்சு அளந்துக்கங்க, அதுல ஒரு அங்குலம் அதிகப்படியா எடுத்துகிட்டு பயாஸ் ஸ்ட்ரிப கட் பண்ணுங்க. இதை உஷா தையல் மிஷின பயன்படுத்தி, ரிப்பனை நெக்லைன்ல துணியோட சரியான பக்கத்தில நெக்லைனுக்கு நேரா ரிப்பனை ஹோல்ட் பண்ணிக்கணும். இதை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணிக்கணும். மிஷினை நேர் தையலுக்கும் தையல் நீளத்தை 2.5க்கும் செட் பண்ணிக்கணும். விஏயோல காட்டியிருக்கற மாதிரி தைக்க தொடங்குங்க. நீங்க செய்தது பாக்க இப்படி இருக்கணும். இப்போதைக்கு இதை அப்படியே விட்டுட்டு அப்புறமா இதுக்கு திரும்ப வருவோம்.







## ஸ்டெப் 4 ஸ்லீவ்கள், பக்க சீம் மற்றும் அடிப்பக்க ஹெம்-ஐ முடித்தல்

அந்த சைட் சீமை பாக்கலாம். ஸ்லீவோட திறந்த முனைகள எடுத்து, வீடியோல காட்டி இருக்கற மாதிரி அவற்றை ஒன்ணா இணைச்சு, துணியின் பின்பக்கத்தில தைக்க தொடங்குங்க. டிரஸ்-ன் அடிப்பக்கத்துக்கு போய்ச் சேர்ற வரை தொடர்ந்து தையுங்க. அடுத்த பக்கத்துக்கும் நாம இதே செயல்பாட்டை திரும்பச் செய்யணும், ஸ்லீவ்ல தொடங்கி அடிப்பக்கம் வரை தையுங்க.

இதை செய்து முடிச்ச பிறகு ஸ்லீவ ஹெம் பண்றதுதான் நமக்கு அடுத்த வேலை. வீடியோல காட்டியிருக்க மாதிரி ஸ்லீவ அரை அங்குலத்துக்கு ரெண்டு தடவை மடியுங்க. சுலபமா வட்ட சீம்களை தைக்க வசதியா மிஷினோட ஆக்சசரி பெட்டிய அகற்றணும்.  ஸ்லீவோட விளைம்பை பிரஸ்ஸர் ஃபூட்டோட அலைன் பண்ணிகிட்டு, தைக்கத் தொடங்கிரலாம். சுற்றிலும் முழுசா தைக்கணும். எந்தத் தவறும் நேராமல் இருக்கறதை தவிர்க்க சரிசெய்துட்டே போங்க. நூலை கட் பண்ணிட்டு இதே செயல்முறைய அடுத்த பக்கத்திலேயும் செய்யுங்க.

உங்க இறுதி தையல் பாக்க இப்படி இருக்கணும். இது முடிஞ்ச பிறகு, டிரஸ்-ன் பட்டனுக்கு போகலாம். ஸ்லீவ்க்கு செய்த அதே மாதியே ரெண்டு தடவை மடிச்சு முழுக்க தைக்கணும். அதிகப்படி நூலை கட் பண்ணிருங்க. இது உங்க டிரஸ்க்கு நேர்த்தியான ஃபினிஷிங்க கொடுக்கும். அருமையான வேலை! இப்ப டிரஸ் கிட்டத்தட்ட முடிஞ்சிருச்சு.

நெக்லைன் பெண்டிங்கல இருக்கறது ஞாபகம் இருக்கா? இப்ப அதைத்தான் பார்க்கப் போறோம். கழுத்துக்கு கையால ஹெம் பண்ணனும். ரிப்பனை பின்னோக்கி டிரஸ்-சோட உள்பக்கம் நோக்கி மடிச்சுட்டு தையுங்க, தையுங்க, தைச்சிட்டே இருங்க. கழுத்தை சுற்றில தையுங்க. உங்க தையல் பாக்க இந்த மாதிரி இருக்கணும். அவ்ளோதான் முடிஞ்சிருச்சு! ஒரு கச்சிதமான A-லைன் ராக்லான் டிரஸ் தைக்கறதோட எல்லா பாக்சையும் டிக் பண்ணியாச்சு.